[2022 அக்டோபர் 19

18—

கலைக் கல்லூரி

***13160—திரு. க. சுந்தர்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் தொகுதி, வாலாஜாபாத் அருகே கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உத்திரமேரூர் தொகுதி அமைந்துள்ள ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் தற்பொழுது ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், 4 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 34 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இவற்றைத் தவிர, 34 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஒரு பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியும் மற்றும் ஓர் அரசு நிதியுதவி பெறும் தொழில்நுட்பக் கல்லூரியும், 2 அரசு உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரிகளும் மற்றும் 6 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அந்தப் பகுதி மாணவ, மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதி, வாலாஜாபாத் அருகே புதியதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.*

திரு. க. சுந்தர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலாஜாபாத், அவளூர், தென்னேரி, அய்யம்பேட்டை, நாய்க்கன்பேட்டை மற்றும் ஏகனாம்பேட்டை போன்ற 5 கி.மீ. சுற்றளவில், 10-க்கும் மேற்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் +2 படித்து முடித்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் வெளியே வருகின்றார்கள். அவர்கள் உயர் கல்வி பெறுவதற்கு காஞ்சிபுரம்*

2022 அக்டோபர் 19]

செல்ல வேண்டும் அல்லது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல உத்திரமேரூர் மற்றும் சென்னையில் உள்ள கல்லூரிகளுக்குத்தான் போக வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட கல்லூரிகள் அனைத்துமே உத்திரமேரூர் தொகுதியில் இல்லை. சென்னையை சுற்றித்தான் இருக்கின்றன. தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 'புதுமைப் பெண்' திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி ஊக்குவிப்புத் திட்டம் ஆகிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதற்கு முன்னால் உயர் கல்வி கிடைக்கவில்லை என்று சொன்னால் பெண் பிள்ளைகளைப் பெற்றெடுத்த பெற்றோர்கள் அவர்களுக்கு உடனடியாகத் திருமணம் செய்து வைத்துவிடுவார்கள். ஆனால், இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'புதுமைப் பெண்' திட்டத்தை அறிவித்ததற்குப் பிறகு, இத்திட்டத்தில் சேர வேண்டுமென்ற நோக்கத்தோடு, (மேசையைத் தட்டும் ஒலி) மாதந்தோறும் ரூ.1,000/- பெறுகின்ற திட்டத்தில் தங்கள் பெண்களும் இணைய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் அவர்கள் இருப்பதால், அந்தப் பகுதிகளில் கல்லூரிகளின் தேவை தற்போது அதிகரித்திருக்கிறது. எனவே, வாலாஜாபாத் பகுதியில் அந்தக் கல்லூரியை அமைக்க வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல். . .

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்னொரு கேள்வி இருக்கிறது.*

திரு. க. சுந்தர்: *அது இருக்கிறது. அதனுடன் தொடர்புடையது. (சிரிப்பு) மதுராந்தகம், செய்யூர் பகுதிகள் முழுக்க, முழுக்க கிராமப்புறங்கள் நிறைந்த பகுதிகளாகும். ஒரு தொகுதிக்கு ஒரு கல்லூரி இருக்கிறது என்று சொன்னாலும், கல்லூரிகளே இல்லாத மதுராந்தகம், செய்யூர் போன்ற பகுதிகளிலாவது கல்லூரி அமைத்துத் தரப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இல்லாத அளவிற்குத் தமிழ்நாட்டில் 31 அரசு கலைக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு*

உத்தரவிட்டிருக்கிற ஒரே முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். அரசு, உயர் கல்வித் துறையின் மூலமாக 20 கல்லூரிகள், அறநிலையத் துறையின் மூலமாக 10 கல்லூரிகள், கூட்டுறவுத் துறையின் மூலமாக ஒரு கல்லூரி ஆக 31 கல்லூரிகளை தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற இந்த 1½ ஆண்டுகளிலேயே திறந்து வைக்கவிருக்கிறார்கள். நீங்களும் அடிக்கடி கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கும் நிச்சயமாக, அடுத்த ஆண்டு, நான் எப்படியாவது மாண்புமிகு முதல்வர் அவர்களிடம்—மாண்புமிகு முதல்வர் அவர்களும் பார்த்துக்கொண்டிருக்கிறார், நிச்சயம் செய்வார். இந்த 31 கல்லூரிகளையும் திறந்து வைக்க ஏற்பாடு செய்திருக்கிறார். அதுமட்டுமல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார். எந்தத் தொகுதியில் கல்லூரிகள் இல்லையோ, அந்தத் தொகுதிக்கு முன்னுரிமை கொடுத்து கல்லூரிகளைக் கொடுக்க வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, உத்திரமேரூர் தொகுதியைப் பொறுத்தவரையில், அவரே ஒத்துக்கொண்டார். உத்திரமேரூர் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று இருக்கிறது. அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லை. சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 2 இருக்கின்றன. அந்தத் தொகுதியில் மட்டுமே 3 கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே, இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, எந்தத் தொகுதியில் கல்லூரிகள் இல்லையோ, அந்தத் தொகுதிக்கு முன்னுரிமை கொடுத்து, வருகிற ஆண்டுகளில் கல்லூரிகள் வழங்கப்படும்.

இப்போது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அருகிலுள்ள பல்வேறு கல்லூரிகளில் இடம் அதிகரித்து தருமாறு கேட்டிருக்கிறார். அவர் சொன்னதைப்போல மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உயர் கல்வி வளர்ச்சியினுடைய திட்டங்கள், அதுவும் குறிப்பாக புதுமைப் பெண் திட்டம், பெண்களுக்கான கல்வி வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகம் தேவைப்படுகிறது. வருங்காலங்களில் நிதிநிலைக்கு ஏற்ப, அவற்றை ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள். இரண்டாவது கேள்வி.

2022 அக்டோபர் 19]

திரு. க. சுந்தர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி காஞ்சிபுரத்தில் ஒரு பொறியியல் கல்லூரியை வழங்கினார்கள். அது உறுப்புக் கல்லூரி. அதை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியாக மாற்ற முடியுமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல உத்திரமேரூரில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், முதுகலைக் கல்வி* (P.G. Courses) *வழங்குகின்ற வகையில்,* M.A. Tamil, M.A. English, M.Com. *வகுப்புகளைத் தொடங்க முன்வருவார்களா என்பதையும், அதைப்போலவே* U.G. courses-*ஐ பொறுத்தவரையில்,* B.A. History, B.Sc. Botany, B.Sc. Zoology *வகுப்புகளைத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று ஓர் உறுப்பினர் பொறியியல் கல்லூரி துவக்கப்படுமா என்று கேட்டிருந்தார். ஆனால், இன்றைய சூழ்நிலையில் பல்வேறு பொறியியல் கல்லூரிகளை நடத்துபவர்கள் எல்லாம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியுள்ளதைப்போல, அரசு கலைக் கல்லூரியாக அதை மாற்றித் தர முடியுமா என்றும் கோரியிருக்கிறார்கள். ஆக, பொறியியல் கல்லூரிகளைவிட, இப்போது அரசு கலைக் கல்லூரிகளுக்கான தேவை அதிகரித்துக்கொண்டிருக்கிறது என்பது நடைமுறைதான். இருந்தாலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற 'நான் முதல்வன்' திட்டத்தின்படி, வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்கு பாட திட்டங்களை மாற்றுவதற்கான ஏற்பாடுகளும் பொறியியல் கல்லூரிகளில் செய்யப்பட்டிருக்கின்றன. அவையும் செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறியியல் கல்லூரியை அரசு கலைக் கல்லூரியாக மாற்ற கோரிக்கை வைத்துள்ளார். கூடுதலாக வேண்டுமானால், கலை பாடப் பிரிவுகளைத் துவக்கலாமே தவிர—பிறகு அவரே வந்து நாளைக்கு சொல்வார்—பொறியியல் கல்லூரியை மூடிவிட்டீர்கள் என்று சொல்வதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. ஆகவே, இங்கே உயர் கல்வியைப் பொறுத்தவரையில், பொறியியல் கல்லூரியாக இருந்தாலும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியாக*

இருந்தாலும், அனைத்திலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப செயல்படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரியில் ஓர் அரசு கலைக் கல்லூரி செயல்படுகிறது. சுமார் 5,000 மாணவ, மாணவியர்கள் படிக்கிறார்கள். கூடுதலாக ஒரு மகளிர் கல்லூரியை அந்தப் பகுதியில் நீங்கள் ஏற்படுத்தினால், முக்கியமாக பெண்கள் கல்வியைத் தொடர அது வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாகத் தரமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். (சிரிப்பு) ஏனென்றால் அங்கேயே கல்லூரி இருக்கிறது. இருந்தாலும்கூட, அதே கல்லூரியில் கூடுதலாக* B.A. Economics *அல்லது* B.Com. Course*-ஐ இந்த வருடத்தில் தொடங்க வாய்ப்பு இருக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எந்தளவிற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள், நன்றி. அவர் கேட்டதைப்போல* additional courses *வேண்டுமென்றால், அந்தக் கல்லூரியிலிருந்து கருத்துருவை* Directorate of Collegiate Education*-க்கு அனுப்பலாம். அவர்கள் அதற்கு அனுமதியளிக்க வேண்டும். நிதிநிலைமைக்கேற்ப பல்வேறு கல்லூரிகளிலே பேராசிரியர்களை நியமிப்பதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. இந்தாண்டு மிகப் பெரிய சாதனையாக, இதுவரை இல்லாத அளவிற்கு 4,000 பேர்களுக்கு நிரந்தரப் பணியை அரசுக் கல்லூரிகளிலே கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிற ஒரே முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை இவ்வாறு 4,000 பேர்*

நியமனம் செய்யப்பட்டது கிடையாது. அதிலே additional ஆகவும் போடுவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். நீங்கள் கேட்டிருக்கிற additional courses-ஐப் பொறுத்தவரை, அந்தக் கல்லூரியின் முதல்வரிடம் சொல்லி, கருத்துருவினை அனுப்பினால், அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

19—

மேம்பாலம்

***650—திரு. S. பழனி நாடார்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, குத்துக்கல்வலசை I.T.I. சந்திப்பில் மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கொல்லம்–திருமங்கலம் தேசிய நெடுஞ்சாலை எண் 208–ல் (புதிய எண் 744) அய்யாபுரம் விலக்கு முதல் குத்துக்கல்வலசை ஐ.டி.ஐ. சந்திப்பு வரை சாலைப் பாதுகாப்புத் திட்டம், 2020-2021–ன்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் நிறைவுபெற்றிருக்கின்றன. இதன் பின்னர், போக்குவரத்து நெரிசலும் குறைந்துவிட்டது. எனவே, அங்கு மேம்பாலம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள்.*